## திருக்குறள்

காமம் - இன்பம்

### 128. குறிப்பறிவுறுத்தல் அதிகாரம்

* காதலர் கண் சொல்லாக் குறிப்பையும் பூக்க உடம்பால் அன்பும் மகிழ்வையும் தெரிவிக்கின்றன அறிவுக்கு எட்டாத நிலையில்.

* தலைவன் மனம் காரணமாகப் பிரிந்து சென்றிருக்க தலைவனை, நீண்ட காலமாகப் பார் இன்பம் திருப்பாமல் தனது நிலையை தெரிவிக்கும் கண்களில் ஏக்கம் இல்லை. ஆனாலும் இதயம் நிறைந்த மனதில் எழுந்த உணர்வுகளை எல்லாம், வாய்ச்சொல்லாக இல்லாமல் குறிப்பினால் அறிவுறுத்தி தெரிவிக்கின்றாள்.

* நேரம் காலம் தெரியாமல் பேசும் தலைவனின் அழகைப் பாராட்டுகின்றாள். உள்ளத்தில் வாய்மொழி பண்பான -யான்றி, கண்ணீரை மறைத்து, புன்னகை தக்க முகத்துடன். பெண்மை நிறைந்த பொறுமையுடன் விளக்கும் தலைவியும் அவளுடன் தெரிவிக்கும் மேலும் பேசுகிறாள்.

* ~~[illegible]~~, இருவர் காதல் உணர்வுகளை வெளிப் படுத்தினாள் தலைவன் இக்குறிப்புகளை மகிழ்ந்து ஏற்கிறான்.

### 28. கூடா ஒழுக்கம் அதிகாரம்

கூடா ஒழுக்கம் என்பதற்கு தக்கபடி அமைந்த துறவுக் -கிற்கும் பொருந்தாத ஒழுக்கம் என்று பெரும்பான்மையர் விளக்கினர். தவ வேடம் வெளியில் காட்டி, உள்நிலையில் பொருந்தா ஒழுக்கத்துடன் இருக்கின்ற போலிமை

நிலைகள் இவ்வதிகாரத்தில் அமையக் காணப்படுகின்றன.

* மக்கள் முன்னோர்களை வழிபாட்டுப் பொருட்களாகவும், அறவாணர்களைப் போற்றுபவர்களாகவும், எல்லா உயிர் களிடத்தும் அருள் செய்பவர்களாகவும் விளங்கி னார் தமிழர்கள்.
* துறவறம் பூண்டவர்கள் இவ்வுலகிற்கு மாறாக துறவியர் வேடம் தாங்கித் துறந்தோர் போல் நடந்து வாழ்ந்து வருகின்றனர்.
* கலைப்படத்தில், செய்யத்தகாத, உலகம் பழிக்கும் இழிவான செயல்களை மறைவாகச் செய்து வாழ்கிறார்கள்
* நிலையது செயலின் தன்மை கொண்டே அவர் உண்மை யானவரா இல்லை போலத் துறவியர் என்பதை அறிந்து கொள்க என இவ்வதிகாரப் பாடல் நன்கு அறிவுறுத்துகிறது

## 33. கொல்லாமை அதிகாரம்

* ஓர் உயிரையும் கொல்லாமல் இருத்தல்
* பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களை யும் காத்தல்
* முதன்மையான 'அறம்' – 'கொல்லாமை' அதற்கு அடுத்து 'பொய்யாமை' ஆகும்
* எந்த உயிரையும் கொல்லாமல் இருக்க வேண்டும் என்று அறநூல்கள் கூறுகின்றன.
* கொலை செய்வதற்கு அஞ்சி அறத்தை போற்றுபவன் அனைத்திலும் உயர்ந்தவன் ஆவான்.
* அவ்வாறு வாழ்பவனின் உயிரை எமனும் எடுக்க மாட்டான்.

Scanned with CamScanner

* தன்னுயிர் உடம்பிலிருந்து நீங்கினாலும் பிற உயிர் எடுக்க
மற்றொரு உயிரைக் கொல்லக் கூடாது.
* நன்மைக்கு கொலைத் தொழிலால் கிடைக்கும் செல்வம்
பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்கு அச்செல்வம்
இழிவானதாகும்.
* கொலைத் தொழிலுடன், இழிவான தீய வாழ்க்கை
உடையவர்கள் பிற உயிர்களைக் கொன்றவர்கள்
ஆவர்.

## 83. கூடா நட்பு அதிகாரம்

* உள்ளத்தால் நெருக்கமில்லாமல் பழகுகிறவரின்
நட்பானது நேரம் அடிப்பதற்கான இடம் கண்டால்
எறிவதற்கு. மறைந்துள்ள பட்டடைக்கல் போன்றது.
* உறவினர் போல இருந்து உண்மையான உறவின-
-ராய் செயல்படாதவருடைய ~~[illegible]~~ நட்பு விலைமகளிர்
மனம் போல வேறுபடும்.
* மலர்ந்த முகத்தோடு இனிமையாகச் சிரித்துப் பேசி
அகத்தில் வஞ்ச வைத்திருக்கும் தீயவர் நட்புக்
கொள்வதற்கு அஞ்ச வேண்டும்.
* நண்பர் போல் நன்மைகள் கூறுவார் ஆனால்
பகைவர் சொல்லும் சொற்களின் உண்மையான
இயல்பு தெரியும்.
* வெளியில் நட்பு செய்து மனத்துக்குள் ~~[illegible]~~
இகழ்கின்றவரை நட்பு சாகும்படிச் செய்யும்.

## 99. சான்றாண்மை அதிகாரம்



* கடமை இது என்று அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு வாழ்பவர்க்கு நல்ல குணங்களெல்லாம் இயல்பாகவே அமைந்திருக்கும்.

* சான்றோரின் நலம் என்று சொல்லப்படுவது அவரது குணநலமே ஆகும்.

* அன்பு, வெட்கம், ஒப்புரவு, கண்ணோட்டம், உண்மை ஆகிய இவ்வைந்தும் சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்களாகும்.

* சான்றோர் தம் பகைவரையும் நண்பராக மாற்றுவதற்கு பயன்படுத்தும் கருவி பணிவு ஆகும்.

* சான்றோர்கள் தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் உதவியினை செய்யாவிட்டால் அவரிடம் சால்பு என்னும் நற்குணம் இருந்தாலும் பயன் தராது.

* சால்பு என்னும் கடலுக்குக் கரை என்று சொல்லப்படும் சான்றோர். ஊழிக்காலத்தில் உலகமே நிலை மாறினாலும் தம் நிலையில் மாறுபடாமல் இருப்பர்.

## 53. சுற்றம் தழால் அதிகாரம்

* முன் சுற்றத்தாராக இருந்து பின் ஒரு காரணத்தால் பிரிந்த-வரின் உறவு, அவர் பொருந்தாமலிருந்த காரணம் நீங்கிய பின் தானே வந்து சேரும்.

* இறைவன் தன் பதவியால் தன் சுற்றத்தாரைத் தொகுக்கக் கூடாது. அவன் தாம் பதவியடைந்த போதும் நோக்கி உதவு-வார்கள்.

* சுற்றம் தழுவக்கூடி அமைந்தால் அதனால் அவருக்குச் செல்வங்கள் பலவற்றையும் தரும்.

* சுற்றத்தாருடன் கூடி மகிழ்ந்து வாழத் தெரியாதவன் வாழ்க்கை கரைகள் இல்லாத குளம் தண்ணீர் நிறையப் பெற்றது போன்றதாகும்.

* சுற்றத்தார்க்கு வேண்டும் போது பொருள் கொடுத்து உதவுபவரும் உறவுகள் சூழ்ந்து இருப்பர்கள்.

* ஒருவன் சிறந்த கொடையாளியாக இருந்து கோபம் கொள்ளாதவனையும் இருந்தால் அவனைப் போல நல்ல சுற்றம் இவ்வுலகில் வேறு யாரும் இல்லை.

* ஒரு குறையினால் தன்னை விட்டுப் போன உறவினர் அவர் குறையை நீக்கினால் மீண்டும் தன்னை வந்து அடைவர்.

## 46. சிற்றினம் சேராமை அதிகாரம்

* சிறுமைப் பண்பு கொண்ட மக்கள் கூடி குழுவாக இருந்தால் அது சிற்றினம் எனப்படும்.

* சிற்றினம் என்று கருணையால் அதில் அகப்பட்ட மக்கள் எந்த வேறு பகுதிகளிலிருந்து வந்து இணைந்தாலும், இயல்பாலும் ஒழுக்கத்தாலும் சிற்றினம் சேர்ந்தவராகக் கருதப்படுவர்.

Scanned with CamScanner

* தான் சேர்ந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்ப மழைநீர் தன் இயல்பை இழந்து அந்நிலத்தின் இயல்பை அடையும்.

* மாந்தர்க்குப் பொது உணர்வுகள் தம் மனம் காரணமாக உண்டாகும்.

* ஒருவனுடைய அறிவு அவனது மனத்தைச் சார்ந்துள்ளது. மனம் கலங்காமல் இருந்தால் அறிவும் தெளிவாகும்.

* நல்ல மனம் உடையவர்களுக்கு மக்கள் பாக்கியமும் நன்கு அமையும்.

* ஒருவனுக்கு நல்ல மனம் இருந்தால் அவனுக்கு மட்டும் அல்லாமல் எல்லா உயிர்களுக்கும் நலம் பயக்கும்.

* முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனாக மறுபிறப்பிலும் தொடர்ந்து வந்து ஒருவருக்கு நன்மை செய்யும்.

* 42. கேள்வி அதிகாரம்

* ஒன்றினைப் பற்றி அறிந்து கொள்ள ஒருவர் வினவுகின்றனர். இதை வினா என்கின்றனர்.

* செவியால் கேட்டுப் பெறும் செல்வமே சிறந்த செல்வம். இது பிற செல்வங்கள் எல்லா வற்றிலும் முதன்மையானது.

* காதுக்கு உணவு சான்றோர் அறிவுரைகளை கேட்டுப் பயனடைதல்.

* வயிற்றுப் பசியை போக்கும் உணவை விட அறிவுப் பசியைப் போக்கும் கேள்வியாகிய உணவே சிறந்தது.

* வாழ்வுக்கு வழிகாட்டும் அறநூல்களைக் கற்றவர்கள் சொல்லக் கேட்க வேண்டும்.

* ஒழுக்கம் உடைய பெரியோர்களின் வாய்ச் சொற்கள் உதவி செய்யும்.

* அறிவு பெற்றவர்கள் ஒன்றைத் தவறாக உணர்ந்தாலும் பேதைமையாக பேச மாட்டார்கள்

* செவியால் நுகரப் படும் சுவைகளை உணராமல் வாயால் அறியப்படும் சுவைகளை மட்டுமே அறியும் மனிதர் வாழ்ந்தாலும் இறந்தாலும் ஒன்றுதான்.

## 44. குற்றங்கடிதல் அதிகாரம்

* அகங்காரம், கடுங்கோபம், காமவெறி இவை மூன்றும் அவை நீங்கியவனது செல்வம் மேம்பாடு அடையும்.
* பிறர் துன்பத்தில் தான் இன்பம் காணுதலும் இவை அனைத்து குற்றங்களும் அழிவையே உண்டாக்கும்.
* இறைவனுக்கு நாம் செய்யும் குற்றத்தைப் போன்ற பகை வேறொன்றும் இல்லை.
* இறைவன் தன்னிடம் உள்ள குறைகளை காணப்படும் நீக்க வேண்டும். பின் பிறரிடம் உள்ள குறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்
* இறைவன் செய்ய வேண்டிய நேரத்தில் பணம் உதவி செய்யாமல் குற்றங்களில் பெரிய குற்றமாகக் கருதப்படும்.
* இறைவன் உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு தற்பெருமை பேசுதல் கூடாது. தன்னைப் பற்றித் தானே பெருமையாக பேசுவது குற்றமாகும்.

## 56 கொடுங்கோன்மை அதிகாரம்

உலகை வெல்ல வேண்டும் என்ற ஆசை உடைய ஆட்சியாளர்கள் அதற்காகப் படை பெருக்குவதற்காக பொருளை வசூலித்து மக்களைப் பறிப்பர்.

Scanned with CamScanner

* மக்களிடம் வழிப்பறி செய்து செல்வத்தை அடைகிறான்.
* மக்களிடம் வழிப்பறி நடக்கும் வகையில் கையில் வேல் கம்பு வைத்திருக்கும் திருடன் வழிப்போக்கரைத் தடுத்து நிறுத்தி மடியில் கட்டி பொருளைக் கொடுக்குமாறு மிரட்டுவதைக் கொ இவனை,
* இவனைப் போன்றவன் தான் 'கொடுங்கோல்' அரசனும் ஆவான்.
* தனது ஆட்சியில் நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து அறிந்து அத்தீமைகளை நீக்காத அரசனின் நாடு நாள்தோறும் தேய்ந்து போகும்.
* ஒரு அரசன் நினைப்படி ஆட்சி செய்வோன் செல்வாக்கும் இழந்து காலப்போக்கில் செல்வமும் ஒழிவான்.
* மக்களின் கண்ணீர் அரசனின் செல்வத்தைக் குறைக்கும்.
* அரசனின் புகழ் அவனது செந்நெறி தவறாத நல்லாட்சியைப் பொறுத்தது.
* மழை இல்லாததால் பயிர்கள் வாடி வருந்தும் அதுபோல இரக்கமற்ற கொடுமையான ஆட்சியா

Scanned with CamScanner

இரவு நலிந்தும் மெலிந்தும் உறங்குவார்கள்.

* மக்களுக்கு நன்மை செய்யாத ஆட்சி நடக்குமானால் மேகமும் வெட்கப்படும் பருவத்தில் மழையைப் பெய்யாது.
* அமைதியான ஆட்சி நடைபெறாத நாட்டில் பசுக்களின் பால்வளம் குறையும்.

## 94. சூது அதிகாரம்

* ஒருவன் வெற்றியே பெறுவதாக இருந்தாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது.
* ஒரு பொருளைப் பெற்று நூறு பொருள்களை இழக்கும் வழியால் நன்மை பெறாது.
* ஒருவன் ஓயாமல் சூதாடினால் அவனது பொருள் விரைவாய் பகைவனிடம் போய் சேரும்.
* ஒருவனுக்கு புகழையும் போய் வறுமை தருவது சூதைப் போல் வேறொன்று இல்லை.
* ஒருவனுக்கு சூதாடுதலே வாழ்க்கை அழுந்தி பொருள் உடையவராக இருந்தாலும் இல்லாதவன் போல் இருப்பான்.

* சூது என்பது துன்பத்தினால், வயிறு நிறைய உணவு உண்ண மாட்டார்.
* சூது பொருளைச் செல்வத்தைச் செலுத்தி பெயரை மேற்கொள்ளச் செய்தாகும்.
* உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி என்று அனைத்தும் சூதாட்டத்தை மேற்கொண்டவனை ஒவ்வொரும் சேராமல் அழிக்கும் ஆகும்.

## 55. செங்கோன்மை அதிகாரம்

* ஒரு குற்றம் செய்தால் வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் தண்டனை வழங்க வேண்டும்.
* உலகில் எல்லா உயிர்களும் வானத்திலிருந்து பொழியும் மழையை நம்பி வாழ்கின்றனர். அரசனது செங்கோல் வளைந்தால் குடிமக்கள் துன்புறுவார்கள்.
* நாட்டில் நீதி நிலை இழைந்தால் சாத்திரங்களும் மதிப்பிழந்து விடும்.
* நீதியும் நேர்மையும் அரசுக்கு இல்லையானால் இயற்கையும் ஒத்துழைக்காது.

* அறநெறியே அரசின் வெற்றிக்கு உண்மையான காரணம்.
* ஆட்சிமுறை தப்பாமல் காக்கும் மனுநீதிச் சோழன் மகன் தவறு செய்த போதும் தண்டித்தான்.
* தற்செயலாக நேர்ந்த தவறுக்குக் பொற்கைப் பாண்டியன் தன் கையை வெட்டித் தனக்கு தண்டனை வழங்கினான்.
* நீதியும் நெறியும் தவறாத அரசு ஆளுபவர்களைத் தண்டிக்க வேண்டும்.

## 11. செய்நன்றி அறிதல் அதிகாரம்

* ஒருவருக்கு யாரும் எவ்வித உதவியும் செய்யாத போதும் தானே முன் வந்து உதவி செய்வது அரிய செயலாகும்.
* ஒருவன் எவ்வித பயனையும் எதிர்பாராமல் செய்யும் உதவி கடலை விட அளவில் பெரிதாகும்.
* ஒருவர் செய்யும் உதவி அதன் அளவைப் பொருத்து மதிக்கப்படுதல் கூடாது. பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்னும் பழமொழியை

* ஒருவர் செய்த நன்மையை ஒருபோதும்
மறக்கக் கூடாது. அவர் செய்த தீமை மறந்து
விடுவது நல்லது.

* அவர் செய்த ஒரு நன்மையை நினைத்தால்
தீமைகள் யாவும் மறைந்து விடும்.

* ஒருவர் செய்த நன்மையைச் சிதைத்தவர்
களுக்கு பாவத்திலிருந்து தப்பிப் பிழைக்கும்
வழியே இல்லை.

## 65. சொல்வன்மை அதிகாரம்

* நாவன்மை என்னும் நலம் ஒருவனுக்கு செல்வம்

* ஒருவன் தன்னுடைய சொல்லால் தவறு நேராமல்
காத்துக் கொள்ள வேண்டும்.

* சொல்லின் திறத்தை அறிந்து சொற்களைச்
சொல்ல வேண்டும்.

* அவைக்கு அறிவுரை கூறுபவர்கள் தம்
பிறரின் அனுபவம் எல்லாவற்றையும்
நன்கு அறிந்த அச்சொற்களை எடுத்துச் சொல்ல வேண்டும்

* சொல்லும் கருத்தை தெளிவாக இனிமையாகச்
சொல்லும் திறமை இவ்வுலகம் விரும்பி கேட்டு
நடக்கும்.

* நாம் கற்றறிந்த நூல்பொருளை மற்றவர் விளங்க மாறச் சொல்லத் தெரியாதவர். மலர்ந்திருந்தும் மணம் வீசாத மலரினைப் போன்றவர்.

## 109. தகையணங்குறுத்தல்

* தகையணங்குறுத்தல் என்பதனை 'அணங்கு' தகை உறுத்தல் என்று மாற்றி அணங்கு என்றால் 'பெண் தகை' என்பது அழகு முதலியன 'உறுத்தல்' வருத்தத்தை உண்டாக்குதல்.

* என் பார்வைக்கு எதிராக அவள் என்னைப் பார்ப்பது தானே தாக்கி எனையும் கொல்லும் ஒரு தெய்வம் தாக்குவதற்குப் படைகளையும் கூட்டி வந்தது போல் இருக்கிறது.

* தலைவி கண்கள், தம்மைக் கண்டவனின் உயிரை உண்ணும் தோற்றத்துடன் அமைந்துள்ளன.

* தலைவின் வளைந்து இருக்கும் புருவங்கள் வளையாமல் நேராக நின்று தடுத்தால், அவள் கண்கள் எனக்கு நடுக்கம் தரும் துன்பத்தைத் தருகின்றது.

Scanned with CamScanner

(15)

* போர்க்களத்தில் பகைவரையும் அஞ்சி நடுங்கச்
எவ்விடம் ஏன் வலிமை ஒளி பொருந்திய இளைஞ
னுக்குத் தோற்று அழிந்ததேன்.

* தலைவர்கள் ஏதும் சொல்லாமல் இல்லையே
என்று கூறி இத் தைக்கிளை கூறும்
பகுதி அதிசயத் தென்னைக் காதல்
என முடிக்க வருகின்றனர்.